## அனர்த்த முகாமைத்துவ நிலையம் - 2014

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

ந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டு வந்த ரூபா 24,149,095 கிரயத்திலான முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு வேலை பூர்த்தி செய்யப்படாத 52 செயற்திட்டங்களின் கிரயம் ரூபா 343,460,435 ஆக இருந்ததுடன், அப்பெறுமதி வேலை பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் நிலையத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையிடமிருந்து 12 மோட்டார் சைக்கிள்கள் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், அச்சொத்துக்களை நிலையத்தின் பெயருக்கு கையேற்கப்பட்டு பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் நிலையத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 93,455 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக அலுவலக உபகரணங்கள் திருத்தங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டின் போது அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையின் நிதியத்தின் மூலம் தேசிய பாதுகாப்பு தினத்தை நடாத்துவதற்காக ரூபா 5,140,984 தொகை அம்பாந்தோட்டை மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய செலவினங்களை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2014 சனவரி 01 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் தேசிய பாதீட்டு சுற்றறிக்கை | இரண்டாம் தர அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு வாகனங்கள் மற்றும் எரிபொருள் படிகள் வழங்குவதற்கு முன்னர் குறித்த உத்தியோகத்தர் நிரந்த சேவை நிலையத்தில் அவ்வசதிகளை பெற்றுக்கொள்ளவில்லை என்பதற்கான எழுத்துமூல உறுதியொன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு சேர்க்கப்பட்ட உத்தியோகத்தரொருவருக்கு எழுத்துமூல உறுதிப்படுத்தலொன்று இல்லாமல் 05 மாத காலப்பகுதிக்காக அவ்வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஆ) 1993 திசெம்பர் 31 ஆந் திகதிய பீபீஏ/6/1/1 ஆம் இலக்கம் மற்றும் 2010 யூலை 09 ஆந் திகதிய சீஏ/1/1/16/1 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கைகள் | அரச உத்தியோகத்தர்கள் உத்தியோகபூர்வ வெளிநாட்டு சுற்றுலாவொன்றில் பங்குபற்றி மீண்டும் நாட்டுக்கு வருகை தந்ததன் பின்னர் 07 நாட்களுக்குள் சுற்றறிக்கையின் ''ஊ'' இணைப்பில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் அறிக்கையொன்று சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது 14 வெளிநாட்டு செயலமர்வுகளிலும் மாநாடுகளிலும் பங்குபற்றிய 07 உத்தியோகத்தர்கள் குறித்த அறிக்கைகளை சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (இ) இலக்க சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிராமணம் 104 மற்றும் நிதிப்பிராமணம் 110 | மீளாய்வாண்டினுள் நிலையத்திற்குச் சொந்தமான 09 வாகனங்கள் 10 விபத்துகளுக்குட்பட்டிருந்ததுடன், நிதிப் பிராமணத்தின் பிரகாரம் ஆரம்ப அறிக்கையொன்றோ அல்லது முழுமையான அறிக்கையொன்றோ சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் அது தொடர்பான விபரங்கள் சேதங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) மற்றும் (5) ஆம் பிரிவு | (i) முற்பணம் வழங்கப்பட்ட செயற்பாடு பூர்த்தியடைந்த உடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 23 சந்தர்ப்பங்களின் போது ரூபா 254,900 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 02 முதல் 10 மாதங்கள் வரையான காலவீச்சில் தாமதமாக தீர்க்கப்பட்டிருந்தன. மேலும் முற்பணமாக வழங்கப்பட்ட சகல பணத்தையும் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்பட வேண்டிய |

வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவ்வாறு தீர்க்கப்படாதிருந்த முற்பணத் தொகைகளின் கூட்டுத்தொகை ரூபா 1,885,238 ஆக இருந்தது.

(ii) பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்த வழங்கல் அல்லது சேவைக்களுக்காக நேரடியாக கொடுப்பனவு செய்ய முடியுமான போதிலும், மாவட்ட அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்த வாகனங்களைத் திருத்தம் செய்வதற்காக முற்பணமாக மாவட்ட செயலாளர்களுக்கு நிதிஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொகையில் ரூபா 557,154 தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 2,616,060 ஆன மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை 9,452,720 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 12,068,780 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது. நிலையத்தின் செயற்பாட்டு செலவினம் ரூபா 18,003,277 ஆல் அதிகரித்திருந்த போதிலும், வருமானம் ரூபா 30,072,057 ஆல் அதிகரித்தமை நிதி விளைவுகளில் அதிகரிப்பிற்கு காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் வெள்ளம், மண்சரிவு, வறட்சி, சூறாவளி, கடல் கொந்தளிப்பு மற்றும் மிருகங்களின் தாக்கம் போன்ற அனர்த்தம் தொடர்பாக இனங்கண்டு அவற்றைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக நிலையத்தினால் அனர்த்தங்களைக் குறைக்கும் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் சிறிய அளவிலான, நடுத்தர அளவிலான மற்றும் பாரியளவிலான செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்துவதற்காக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 537,032,019 ஆக இருந்தது. நிலையத்தால் அனர்த்தங்களைக் குறைத்தல் தொடர்பான செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலாளர்களுக்கு ரூபா 538,817,431 நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தயாரித்திருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிலையத்தின் மூலம் 148 செயற்திட்டங்களை செயற்படுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிலையத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 108 செயற்திட்டங்கள் மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தினால்

இந்நிறுவனங்களின் செயல்நடவடிக்கைத் திட்டங்கள் இணைந்ததாக இருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை வேலைகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த சகல செயற்திட்டங்களும் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடு பூர்த்தி செய்யப்படாதிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டில் ரூபா 4,160,000 தொகை செலவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள புன்சி அப்பு ஐந்துவ வாவியின் அலைத்தடுப்பு அமைக்கும் செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) செயற்திட்டத்திற்குரிய நிதிஏற்பாட்டை வழங்குவதற்கு முன்னர் முறைப்படி செயற்திட்ட முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 108 அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டங்களுக்குரிய செயற்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்காமல் ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தன. அச்செயற்திட்டங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 324,553,620 ஆக இருந்தன.

(iv) நிலையத்தினால் 2013 நவம்பர் 25 ஆந் திகதிய உள்ளக சுற்றறிக்கையொன்றின் மூலம் செயற்திட்டங்களுக்காக முற்பணமாக வழங்கப்படும் தொகை மொத்த மதிப்பீட்டு பெறுமதியில் 40 சதவீதம் என மாவட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த எல்லையைக் கருத்திற்கொள்ளாமல் 09 செயற்திட்டங்களுக்காக மொத்த மதிப்பீட்டு பெறுமதியில் 42 சதவீதம் முதல் 77 சதவீதம் வரையான வீச்சில் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

(v) அனர்த்தங்களைக் குறைக்கும் செயற்திட்டங்களை ஆரம்பிக்கும் போது ஒப்பந்தக்காரர்களுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும், ரூபா 230,209,426 மதிப்பீட்டுப் பெறுமதியான 71 அனர்த்தங்களைக் குறைக்கும் செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) அனர்த்தங்களைக் குறைக்கும் செயற்திட்டங்களை அமுல்படுத்தியதன் பின்னர் அப்பணத்தை செலவிடுவதற்கான தேவைப்பட்டியல், மாவட்ட செயலாளர் பணம் பெற்றுக் கொண்டதற்கான பற்றுச்சீட்டு மற்றும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டமைக்கான அறிக்கையொன்று என்பவற்றை நிலையத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 501,132,349 மதிப்பீட்டுப் பெறுமதியான 167 செயற்திட்டங்களுக்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(vii) அனர்த்தங்களைக் குறைக்கும் செயற்திட்டங்களுக்காக பணத்தை வழங்கியதன் பின்னர் அச்செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு முற்பணம் வழங்கப்பட்டதன் பின்னர் எஞ்சிய தவணைகள் கொடுப்பனவின் போதும் இத்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட 22 மாவட்டங்களில் அவ்வாறு பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான அறிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 143 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 37 செயற்திட்டங்ளுக்குரிய செலவு செய்யப்படாத

பணத்தை மாத்திரம் நிலையத்திற்கு மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 106 செயற்திட்டங்ளுக்காக செலவின அறிக்கைகளை பெற்றுக்கொள்ளாமையால் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் எஞ்சிய பணம் நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்தை மாவட்ட செயலகங்களில் தடுத்துவைக்காமல் நிலையத்திற்கு பெற்றுக்கொள்ளும் முறைமையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிலையத்தினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அனர்த்தங்களைக் குறைக்கும் செயற்திட்டங்களின் கீழ் ஆண்டின் இறுதியில் வேலை நிறைவு செய்யப்படாத செயற்திட்டங்கள் 09 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 13 மாவட்ட அலுவலகங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அந்த 09 செயற்திட்டங்களுக்கு மேலதிகமாக ரூபா 95,983,256 ஆன முற்பணங்கள் விடுவிக்கப்பட்டிருந்த 27 செயற்திட்டங்களில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ii) மேலும் மீளாய்வாண்டின் போது 03 மாவட்டங்களில் 20 செயற்திட்டங்களுக்காக ரூபா 46,534,568 மொத்த மதிப்பிடப்பட்ட பணமும் மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், திசெம்பர் 31 வரையிலும் அச்செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த பாரியளவிலான 03 செயற்திட்டங்களின் வேலைகள் 2011 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டங்களின் செயன்முன்னேற்ற அறிக்கைகளின் படி களுத்துறை மற்றும் பாணந்துறை பிரதேசங்களில் வெள்ள அனர்த்தத்தைக் குறைக்கும் செயற்திட்டத்தினதும் தம்புள்ள வெள்ள அனர்த்தத்தைக் குறைக்கும் செயற்திட்டத்தினதும் நடவடிக்கைகள் 2015 மார்ச் மாதம் வரை வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் யாழ்ப்பாண தீபகற்பத்தில் வெள்ள அனத்தத்தைக் குறைக்கும் செயற்திட்டத்தின் செயன்முன்னேற்ற அறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அனர்த்த இடரினைக் குறைக்கும் நோக்கம் ஒவ்வொரு மாவட்டத்திலும் முன் தயார்படுத்தல் திட்டமிடல் நிலையத்தினால் நிறைவேற்றப்படுகின்றது. மீளாய்வாண்டின் போது முன் தயார்படுத்தல் திட்டமிடலுக்காக 797 நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 8,003,000 தொகை மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன. அந் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே செயல்நடவடிக்கைத் திட்டத்தையும் நிகழ்ச்சித்திட்டங்களின் இறுதியில் செய்யப்பட்ட வேலை தொடர்பான அறிக்கையொன்றை தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், சமூகமளித்தவர்களின் பொறுப்பேற்றல் மற்றும் சிக்கல்களைக் குறைப்பதற்கு முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் அவ்வறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் 2009 ஆம் ஆண்டின் போது பாதுக்க பிரதேசத்தில் தகவல் தொடர்பாடல் நிலையமொன்று தாபிக்கப்பட்டு அங்கு ரூபா 72,471,168 பெறுமதியான உபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும்

இந்நிலையம் 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செயற்படாதிருந்ததுடன், 2015 மே 15 ஆந் திகதி வரை அவ் உபகரணங்கள் கழற்றி அகற்றப்பட்டு நிலையத்தின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நெதர்லாந்து வெளிநாட்டு கடன் உதவித் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டு 14 மாவட்டங்களில் தாபிக்கப்பட்ட 77 சுனாமி முன்தயார்படுத்தல் ஒலிச் சமிக்ஞை கோபுரங்களுக்காக செயற்கைக் கோள் தொழில்நுட்ப தொடர்புபடுத்தலுக்காக அமெரிக்கன் சிக்னல் கோப்பரேஷன் நிறுவனத்திற்கு வருடாந்தம் ரூபா 6,778,353 தொகையான கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கையில் நகர தொடர்புபடுத்தல் அனர்த்தத்திற்குள்ளான நகரங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் தந்திரோபாய மார்க்க முன் அறிவுறுத்தல் இயலளவு மேம்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் வெவ்வேறு செயற்பாடுகளுக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் ரூபா 10,260,000 தொகை நிலையத்திற்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 7,410,000 தொகை குறித்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாமல் திறைசேரிக்கு மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிலையத்தினால் அவசர பொறுப்பேற்றலுக்காக மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களில் ரூபா 13,193,408 பெறுமதியான 13 உபகரண வகைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பகிர்நதளிக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) அனர்த்த முகாமைத்துவ நிலையம் நடாத்திச் செல்லப்படும் கட்டிடம் வளிமண்டளவியல் திணைக்களத்திற்குரிய காணியொன்றில் 2010 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அக்காணியை நிலையத்திற்கு கையேற்கும் நடவடிக்கைகள் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அமைப்பிற்குரிய ரூபா 206,011 பெறுமதியான பொருள் இருப்பொன்று காணாமல் போய் 07 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அப்பெறுமதியை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ஒழுக்காற்று பரிசோதனையொன்று மூலம் குற்றவாளியாக்கப்பட்ட நிலையத்தின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 2011 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 272,168 தொகையும் மேலும் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 132,000 தொகையும் அறவிடப்பட வேண்டிய போதிலும், 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிலையத்திற்குச் சொந்தமான வாகனமொன்று மீளாய்வாண்டின் சனவரி மாதத்தின் போது விபத்திற்குட்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக ரூபா 168,645 ஆன நட்டமொன்று கணக்கிடப்பட்டிருந்தது. அந்நட்டத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் யூலை மாதத்தின் போது அவ்விபத்திற்கு குற்றவாளியாக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நிலையம் தவறியிருந்தது.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 257 ஆக இருந்த போதிலும், உள்ளவாறான எண்ணிக்கை 224 ஆக

இருந்தமையால் வெற்றிடங்கள் 33 ஆக இருந்தது. அதன் பிரகாரம் பணிப்பாளரொருவர், 07 பிரதிப் பணிப்பாளர்கள், 02 மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் 03 தொடர்பாடல் தொழில்நுட்ப வல்லுனர்கள் தொடர்பாக 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையத்தின் அனர்த்தத்தை தவிர்ப்பதற்கும் குறைப்பதற்குமான பிரிவு பணிப்பாளர் (செயற்பாடு) மற்றும் 03 உதவி முகாமைத்துவ உத்தியோகத்தர்களை உள்ளடக்கியிருந்த போதிலும், பிரதிப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்காகவும் செயற்திட்டங்களின் தொடர் நடவடிக்கைகளை பரீட்சிப்பதற்கு தேவையான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரச்சட்டத்தை உருவாக்குதல்

2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் அனர்த்த முகாமைத்துவ நிலையம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அதிகாரச்சட்டம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் திருத்தம் செய்யப்பட்டு சட்ட வரைவுத் திணைக்களத்திற்கு 2014 யூன் 16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் அந்த வரைவு அதிகாரச்சட்டத்திற்காக அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

### 5.2 தேசிய அவசர செயற்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் 2015 மே 31 ஆம் திகதி வரையிலும் வரைவு நிலையிலேயே காணப்பட்டது.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

நிலையத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக 02 கணக்காய்வு உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தமையால் நிலையத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் விரிவான கணக்காய்வொன்றை மேற்கொள்ள முடியாமல் இருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் தொடர்புடைய கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன், பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) அனர்த்த இடரினைக் குறைக்கும் செயற்திட்டங்கள்
(இ) பதவியணியினர் நிர்வாகம்